# பொருளடக்கம்


- குலதெய்வம்
- குலதெய்வம் எவ்வாறு அமைகிறது?
- குலதெய்வத்தின் அருள்
- குலதெய்வ வழிபாட்டின் சிறப்புகள்
- குலதெய்வத்தை கண்டறியும் முறைகள்
- விரத நாட்களில் செய்யக்கூடாதவை
- குலதெய்வம் வீட்டில் தங்கியிருக்க சில வழிமுறைகள்
- குலதெய்வத்தை வீட்டிற்கு அழைக்க எளிய வழிமுறைகள்
- ஜாதகப்படி குலதெய்வத்தை கண்டறிவது எப்படி?
- பௌர்ணமி வழிபாடு
- அமாவாசை வழிபாடு
- பெண்களின் குலதெய்வங்கள்
- குலதெய்வ வழிபாடு குறிப்புகள்

- இந்த விந்தையான உலகத்தில் பிறப்பெடுத்து இருக்கக்கூடிய அனைத்து உயிரினத்திலும் மேம்பட்டும், சிறந்தவர்களாகவும் விளங்கக்கூடிய ஒரு உயிரின கூட்டம் இருக்கின்றது என்றால் அது மனித உயிரினம் ஆகும்.

- மற்ற கலாச்சாரங்களில் இருந்து நம்முடைய கலாச்சாரம் மாறுபட்டு இருப்பதும், பல துன்பங்கள் வந்தபோதும் அந்த துன்பங்களில் ஏற்படக்கூடிய விளைவுகளையும், இன்னல்களையும் போக்கக்கூடிய ஒரு வலிமையான வழிபாடு ஒன்று உள்ளது. அந்த வழிபாடு எதுவென்று இன்றளவும் பல மக்களுக்கு தெரிவதில்லை?

- நம்முடைய எண்ணங்களுக்கு வலிமை என்பது மிகவும் அதிகமாகும். அந்த எண்ணங்கள் நம்மை காக்கக்கூடிய சக்தியுடன் இணையும் பொழுது அது மென்மேலும் சக்தி பெற்று நம்மை காக்கும் ஒரு மாபெரும் அரணாக திகழும். அந்த மாபெரும் அரணை கண்கூட கண்டவர்கள் நமக்கு முன் வாழ்ந்து மடிந்த நம்முடைய முன்னோர்கள் மட்டுமே.

- அன்றைய தினங்களில் மனிதர்கள் தாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலிலும் மறைந்திருக்கும் அல்லது வெளிப்படையாக இருக்கக்கூடிய நன்மை, தீமைகளை அறிந்து நமது அடுத்தடுத்த தலைமுறைகள் நன்முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக பல முன்னேற்ற வழிபாடுகளையும், சக்திவாய்ந்த வழிபாட்டையும் உருவாக்கி அதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டி சென்றனர்.

- ஒரு குலம் முழுமையாக வலிமை படைத்த குழுவாக இருந்து செயல்பட வேண்டுமெனில், அந்த குலத்தை பாதுகாக்கக்கூடிய அதாவது நேர்முக எதிர்ப்புகள் மட்டுமின்றி மறைமுகமாக (பில்லி, ஏவல் போன்ற மறைசக்திகள்) இருக்கக்கூடிய எதிர்ப்புகளையும் எதிர்த்து போராடக்கூடிய சக்தியை அளிக்கக்கூடிய வழிபாடு என்பது **"குலதெய்வ வழிபாடு"** மட்டுமே என்பதை அன்றைய தினத்தில் வாழ்ந்த நம்முடைய முன்னோர்கள் அறிந்திருந்தனர். குலதெய்வ வழிபாட்டின் பயன்களையும் அதனால் ஏற்பட்ட நன்மைகளையும் அனுபவித்த நம்முடைய முன்னோர்கள் அடுத்த தலைமுறைகளுக்கு விரிவாகவும், சூட்சமமாகவும் எடுத்துரைத்து சென்றனர்.

- ஆனால், இன்றைய நிலையில் மனிதர்கள் அவரவர்களின் குல முன்னோர்கள் உருவாக்கி கொடுத்த வழிபாட்டினை மறந்து பகுத்தறிந்து உணரும் தன்மையினாலும், சில மனிதர்களுடைய பேராசைக்காகவும் அவரவர்களின் குல வழிபாட்டையும் மறந்துவிட்டனர்.

- குல வழிபாட்டை மறந்தது மட்டுமல்லாமல் அவரவர்களின் குல தெய்வங்களையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு சொல்லாமலும் சென்றனர்.

- சிலரின் மனதில் தோன்றும் **குல வழிபாடு என்பது அவ்வளவு முக்கியமா என்று?**

- ஆம். குல வழிபாடு என்பது மற்ற வழிபாடுகளை காட்டிலும் மிகுந்த முக்கியத்துவமும், சக்தியையும் அளிக்கக்கூடிய வழிபாடாகும்.

- குலத்தினை காக்கக்கூடிய தெய்வத்தை வழிபடாமல் மற்ற எந்த தெய்வத்தை வழிபட்டாலும் நமக்கு கிடைக்கவேண்டிய அருளும், பாக்கியமும் தாமதமாக கிடைக்கும் அல்லது கிடைக்காமலேயே போகும்.

- நமக்கு கிடைக்கக்கூடிய அதிர்ஷ்டத்தையும், துன்பத்தை அளிக்கக்கூடிய சக்தியை உடைய குலதெய்வ வழிபாட்டை பற்றியும், குலதெய்வத்தை பற்றியும், குல தெய்வத்தை எவ்விதம் கண்டுபிடிப்பது? என்பதை பற்றியும் நாம் விரிவாக பார்ப்போம்.

# குலதெய்வம்

- குலம் என்ற சொல்லுக்கு குடும்பம், பாரம்பரியம் என்பதே பொருளாகும். ஒவ்வொரு குடும்பமும் பரம்பரை வழியாக வழிபட்டு வந்த தெய்வமே குலதெய்வம் என்று அழைக்கப்படுகிறது. அப்படிப்பட்ட குலதெய்வத்தை வழிபடுவதன் மூலம் குடும்பத்தில் ஒற்றுமையும், வளர்ச்சியும், முன்னேற்றமும் சிறப்பாக அமையும். ஆதலால் குலதெய்வ வழிபாடு மிகவும் அவசியமானதாகும்.

- மேலும், தற்கால சூழ்நிலையில் வேலை மற்றும் தொழில் நிமிர்த்தமாக வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களும், அவர்களின் வாரிசுகளும் தங்களின் உறவுகளை இனம் காண நமக்கு இந்த குலதெய்வ வழிபாடு அவசியமாகிறது. ஏனெனில், குறிப்பிட்ட விசேஷ நாட்களுக்காக குலதெய்வ கோவிலில் கூட இவர்கள் தங்களின் உறவுகளை புதுப்பித்து கொள்ளவும், குலதெய்வ வழிபாடு பெரிய பாலமாக அமைகிறது.

## குலதெய்வம் எவ்வாறு அமைகிறது?

- குலதெய்வம் என்பது நமது முன்னோர்களில் தெய்வமாக மாறிவிட்ட புனித ஆத்மாக்கள் ஆகும். அந்த புனித ஆத்மாக்கள் தங்கள் குலத்தை சார்ந்தவர்களை கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் வல்லமை படைத்தவை. எனவேதான், அந்த தெய்வங்கள் குலதெய்வம் என்று சிறப்பு பெறுகிறது. ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் குலதெய்வமாக அமைகிறது. பெரும்பாலும் பெண் தெய்வமே அனைவருக்கும் குலதெய்வமாக இருக்கின்றது.

- குலதெய்வ கோவில் என்பது பிரம்மாண்டமான கோவிலாக இருக்காது. சிறிய கோவிலாக தான் இருக்கும். அதில் அமைந்திருக்கும் தெய்வம் சிலருக்கு சிலை ரூபமாகவும், சிலருக்கு பெட்டியாகவும், சிலருக்கு பானை வடிவிலும், கூடை வடிவிலும் இருக்கும்.

- நமது தலைமுறைக்கு முன் 60 தலைமுறைக்கு முற்பட்ட காலத்தில் நம்முடன் வாழ்ந்து மறைந்த உன்னதமான நபர்களையே குலதெய்வமாக நாம் கொண்டாடுகின்றோம். குலதெய்வத்திற்கு என்று கர்ண பரம்பரை கதைகளே இருக்கும். அவர்களை குலதெய்வமாக நாம் வணங்குகின்றோம். **ஆதலால் அமாவாசை அன்று குலதெய்வ வழிபாடு அனைவருக்கும் சிறப்பானதாக கூறப்படுகிறது.**

## குலதெய்வத்தின் அருள்:

- "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது" என்பார்கள். குலதெய்வம் சிறுதெய்வமாக இருந்தாலும் அதன் சக்தி மிகவும் பெரியது அளவிடற்கரியது. ஒவ்வொரு மனிதனும் மாதா, பிதாவுக்கு பின்னர் வணங்கவேண்டிய தெய்வம் ‘‘குலதெய்வம்’’ ஆகும். அதன் பின்னரே மற்ற தெய்வங்களை வழிபட வேண்டும். மற்ற தெய்வங்களை இஷ்ட தெய்வம் என்பார்கள். நாம் நம் வீடுகளில் சிறிதாக கணபதி ஹோமம் செய்தாலும் கூட முதலில் குலதெய்வத்தை வணங்கிய பின்பு தான் பூஜையை துவங்குகிறோம். நாம் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து உதவி செய்யும் ஒரே தெய்வம் குலதெய்வம் ஆகும்.

- எவரொருவர் குலதெய்வ வழிபாட்டை தொடர்ந்து செய்து வருகிறார்களோ அவர்களுக்கு நவகிரகத்தினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் பெரிதான பாதிப்பை ஏற்படுத்தாது. உதவிகள் செய்ய தகுந்த நபர்கள் வந்து சேருவார்கள். குலதெய்வத்திற்கு தடைகளை தகர்த்தெறியும் சக்தி உண்டு.

- எந்த ஒரு தெய்வமும் ஒருவருக்கு நல்ல அதிர்ஷ்டங்களை தருவதாக இருந்தாலும் அவைகள் குலதெய்வத்தின் வாயிலாகவே தெய்வங்கள் அருளினை வழங்குவார்கள். நம்மை கவசம் போல குலதெய்வம் கட்டி காக்கின்றது. அப்படிப்பட்ட குலதெய்வத்தை தினமும் வணங்கிய பின்னரே அனைத்து செயல்களையும் துவங்க வேண்டும்.

- மனிதர்கள் அதிகமாக கஷ்டங்களை அனுபவிப்பதற்கு கர்மவினைகளே காரணமாக அமைகின்றது. கர்மவினைகளை நீக்கும் தன்மை குலதெய்வத்திற்கு மட்டுமே உண்டு. மிக அதிகமாக கர்மவினை உள்ளவர்களுக்கு தமது குலதெய்வம் எது என்பது தெரியாமல் போய்விடுகிறது. அதனால் அவர்களுக்கு அதன்மேல் நாட்டம் ஏற்படுவதில்லை.

## குலதெய்வ வழிபாட்டின் சிறப்புகள்:

- ஒருவர் எந்த தெய்வ வழிபாடு செய்தாலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, குலதெய்வ வழிபாட்டை மட்டுமாவது கட்டாயம் செய்ய வேண்டும். குலதெய்வத்திற்கு அனைத்து செயல்களையும் சித்தியாக்கும் வல்லமை உண்டு.

- "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலேயே’’ என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கேற்ப குலதெய்வத்திற்கு குறிப்பிட்ட விசேஷ தினங்களில் விசேஷ பூஜைகள் செய்யும்போது தெய்வங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து நாம் வேண்டுகின்ற அனைத்து வரங்களையும் மகிழ்ச்சியுடன் நமக்கு அளிக்கும். குலதெய்வத்திற்கு